குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.183/2016

அ.சா. 8

2024–ம் ஆண்டு பிப்ரவரி 23–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 08–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | ஜாதி | |
| தந்தை பெயர் | சின்னராமசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.02 மணி,

Accused Mariyappan present. Advocate Mr. Gopal present for accused. APP Mr.M.Suresh Present.

**முதல் விசாரணை:**

1. நான் துட்டம்பட்டி கிழக்கு மேடு கிராமத்தில குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1, 2 ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2014 ம் ஆண்டு அ.சா.2 செல்வம் என்பவரும் ஆஜர் எதிரிக்கும் சண்டை நடந்ததாக கேள்வி பட்டேன். ஆஜர் எதிரி என்னிடம் ரூ.60,000/– கடன் வாங்கியிருந்தார்கள். அ.சா.2 செல்வம் ரூ.1,00,000/– கடன் வாங்கியிருந்தார். மேற்படி கடன் பெற்றதற்காக இருவரும் தனித்தனியாக என்னிடம் எம்ஓடி எழுதி கொடுத்தார்கள்.

2. அ.சா.2 செல்வம் மூலமாக தான் எனக்கு ஆஜர் எதிரி அறிமுகம் ஆனார். அ.சா.2 செல்வம் தான் ஆஜர் எதிரிக்கு என்னிடம் இருந்து கடன் வாங்கி கொடுத்தார். கடன் வாங்கிய பின்பு 2–3 வருடங்கள் அ.சா.2 மற்றும் ஆஜர் எதிரி ஆகிய இருவரும் கடன் தொகையை திருப்பி தராமல் இருந்து வந்தார்கள். நான் பஞ்சாயத்தார் மூலமாக கடன் தொகையை திருப்பி தரச் சொல்லி அ.சா.2 மற்றும் எதிரியிடம் பேசினேன்.

3. ஆனால் எதிரி மற்றுமு அ.சா.2 இருவரும் பஞ்சாயத்திற்கு கட்டுப்படாமல்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2024.02.23 17:45:43 +0530

இருந்து வந்தார்கள். அதனால் நான் அவர்கள் மீது நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று இருந்து விட்டேன். அதன்பின்பு ஆஜர் எதிரி அ.சா.2 செல்வம் வீட்டருகே உள்ள டீ கடையில் அ.சா.1 இருந்த போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ தகாத வார்த்தையால் பேசியதாக கேள்வி பட்டேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரனை:**

4. அ.சா.2 செல்வம் எனது சகோதரி தங்கம்மாவின் மகன் என்றால் சரி.அ.சா.1 கவிதா செல்வத்தின் மனைவி என்றால் சரி. ஆஜர் எதிரி அ.சா.1 மற்றும் 2 ஐ எந்த தேதியில் எத்தனை மணிக்கு அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. எதிரி மாரியப்பன் என்னிடம் பணம் வாங்கிய போது அவருக்கு சொந்தமான 8 சென்ட் நிலத்தை அடமானம் வைத்து தான் பணம் வாங்கினார் என்றால் சரி.

5. செல்வம் மேற்படி கடன் தொகையை என்னிடம் செலுத்திவிட்டு பத்திரத்தை வாங்கி கொண்டார். மேற்படி பத்திரம் எதிரி மாரியப்பனிடம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. கடன் தொகையை மாரியப்பன் தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து என்னிடம் திருப்பி கொடுத்தார் என்றாலும் அவரிடம் தான் நான் பத்திரத்தை திருப்பி கொடுத்தேன் என்றாலும், சரியல்ல. மாரியப்பன் என்னிடம் எழுதி கொடுத்த பத்திரத்தில் கடன் தொகையை ஒரு வருடத்திற்குள் செலுத்தாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

6. மாரியப்பன் பணத்தை திருப்பி கொடுக்காத போது நான் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரி. மேற்படி பத்திரத்தில் மாரியப்பன் என்னிடம் ரூ.30,000/- தான் கடன் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிவர தெரியவில்லை. போலீஸார் என்னிடம் போனில் தான் விசாரித்தார்கள் நேரடியாக விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் எனது சகோதரியின் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.22 மணி,

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.02.23 17:45:51 +0530